ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1871/26 - 2014 ජූලි මස 16 වැනි බදාදා - 2014.07.16

*1871/26 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

***2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் கீழ், கட்டுநாயக்க-சீதுவ நகர சபையின் துணைத்தவிசாளர் பதவியிலான வெற்றிடத்தை நிரப்புதல்***

*துணைத்தவிசாளர், தவிசாளர் பதிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக கட்டுநாயக்க-சீதுவ நகர சபையின் துணைத் தவிசாளர் பதவி வெற்றிடமாகியுள்ளதாலும் ;*

*மேற்குறித்த கட்டளைச் சட்டத்தின் 65அ (1) ஆம் பிரிவின் கீழ், எம். டினல் பெரேரா என்னும் துணைத்தவிசாளர் அங்கம் வகிக்கின்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர் முப்பது (30) நாட்கள் காலப்பகுதிக்குள் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரென வெளிப்படுத்தப்பட வேண்டியவரும் அக்கட்சியைச் சேர்ந்தவருமான கட்டுநாயக்க-சீதுவ நகர சபையின் உறுப்பினர் தொடர்பாக தீர்மானிக்குமாறு என்னால் பணிக்கப்பட்டுள்ளாராதலாலும் ;*

*மேலே கூறப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியின் செயலாளர், அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்காக திரு. ஆரச்சில காமிணீ ஹெட்டிஆரச்சி என்பவரைப் பெயர் குறித்து நியமிக்கும் தமது முடிவினை அறிவித்துள்ளாராதலாலும் ;*

*இப்போது கட்டுநாயக்க-சீதுவ நகர சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் பதிராஜ ஆரச்சில்லாகே சுனில் சேனாரத்ன ஆகிய நான், 2013 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 அ (1) என்னும் பிரிவின் நியதிகளின்படி செயற்பட்டு, திரு. ஆரச்சில காமிணீ ஹெட்டிஆரச்சி என்பவர், கட்டுநாயக்க-சீதுவ நகர சபையின் துணைத்தவிசாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*பீ. ஏ. எஸ். சேனாரத்ன,*
*தெரிவத்தாட்சி அலுவலர்,*
*கட்டுநாயக்க-சீதுவ நகரசபை.*

*மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம்,*
*கம்பஹா,*
*2014, யூலை 14.*

*08 - 103*



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*